# எல்லாம் நன்மைக்கே



தெரு ஓரத்தில் ஓர் ஆலமரம் நின்றது. அது கிளைகளைப் பரப்பி நல்ல நிழலைத் தந்தது. அந்த மரத்தில் பல பறவைகள் கூடு கட்டி வாழ்ந்தன. வழிப்போக்கர்கள் அதன் நிழலில் இளைப்பாறிச் செல்வர்.

ஒரு நாள் வழிப்போக்கன் ஒருவன் அவ்வழியே வந்தான். ஆலமர நிழலில் இளைப்பாறினான். ஆலமரத்தின் பழங்களைப் பார்த்தான். அவை மிகவும் சிறியனவாக இருந்தன.



ஆலமரம் மிகவும் பெரியது
அதன் பழங்களோ மிகவும்
சிறியவை. இறைவன் ஏன்
இப்படிப் படைத்தான்?
பூசணிக்காய் போன்று
படைத்திருக்கலாமே' என்று
யோசித்தான்.

சிறிது நேரத்தில் அவன்
தூங்கி விட்டான். அந்தநேரத்தில்
ஆலம்பழம் ஒன்று அவனது
நெற்றியில் விழுந்தது. திடுக்கிட்டு
எழுந்தான். ஆலம்பழத்தைக்
கண்டான்.

நல்லவேளை இந்த ஆலம்பழம்
பூசணிக்காய் போல இருந்தால்
எனது கதி என்னவாகி இருக்கும்.
தலை உடைந்து இருக்கும்.
கடவுள் என்னைக் காப்பாற்றி
விட்டார். கடவுளின் செயல்கள்
யாவும் நன்மைக்கே'
என்று உணர்ந்தான்.

குறிப்பு: * இப்பாடத்தை சரியான உச்சரிப்புடன் வாசிக்க வழிநடாத்தவும்.
* சிறு வினாக்களைக் கேட்டு விடை கூறச் சந்தர்ப்பம் அளிக்கவும்.